கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

15 | T |

Ministry Of Education, Higher Education and Vocational Education

க.பொ.த.(சா/த) முன்னோடி மாதிரி வினாப்பத்திரம் - 2026

G.C.E. (O/L) Pre-Model Question Paper – 2026

1

கிறிஸ்தவம் I, II
Christianity I, II

மூன்று மணித்தியாலம்
Three hours

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minites

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

1. இஸ்ரவேலரை ஆட்சி செய்ய வருகிறவரின் பிறப்பு மற்றும் அவருடைய சந்ததியைக் குறித்தும் இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர்,

   1. எசேக்கியேல் 2. மீக்கா 3. ஏசாயா 4. ஓசியா

2. திருமுழுக்கு யோவானின் காலத்தில் யூதேயாவின் ஆளுநராக இருந்தவர் யார் ?

   1. கமாலியேல் 2. ஏரோது 3. பிலாத்து 4. காய்பா

3. "கடவுள் விடுவிக்கிறார்"என்ற பெயர் யாருக்கு கொடுக்கப்பட்டது

   1. சிமியோனுக்கு 2. திருமுழுக்கு யோவானுக்கு 2. இயேசு கிறிஸ்துவுக்கு 3. எரேமியாவுக்கு

4. இலங்கை மக்களாக நாம் கலாசார சம்பிதாயங்கள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றும்போது

   1. கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் திருவிவிலியத்தின் அடித்தளத்திற்கும்முரணாக செயற்படக் கூடாது
   2. மற்றவர்களின் பாராட்டை மதிக்க வேண்டும்
   3. வன்முறையை ஊக்குவிக்க வேண்டும்
   4. மத நம்பிக்கையை விட இனத்தை உயர்வாக கருதவேண்டும்

5. உரோமபேரரசின் ஆட்சிக்குட்பட்ட பலஸ்தீனாவின் கீழ் இருந்த பிரதேசம்

   1. கொரிந்து இத்துரேயா 2. எபேசு கலிலேயா 3. கலிலேயா இத்துரேயா 4. இத்துரேயா எபேசு

6. "ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை" என்று கூறிக்கொண்டு மனம் திரும்பாதவர்களைக் குறித்து கூறியது யார்

   1. திருமுழுக்கு யோவான் படைவீரர்களுடன் 2. திருமுழுக்கு யோவான் யூத மதத்தினரிடம்
   3. இயேசு யூத மக்களிடம் 4. இயேசு பரிசேரிடம்

7. பிலிப்பு, எத்தியோப்பிய நிதி அமைச்சருக்கு விளக்கியதைக் குறிக்கும் திருவிவிலியப் பகுதியில் வெளிப்படுத்தப்படும் இயேசு கிறிஸ்துவின் சிறப்பியல்பு

   1. அவருடைய வல்லமை 2. அவருடைய வெற்றி
   3. அவருடைய தாழ்மை மற்றும் தியாக மனப்பான்மை 4. அவருடைய முன் ஆயத்தம்

8 ஒலிவ மலையில் இயேசு செய்த ஜெபத்தின் முக்கிய நோக்கம் என்ன

1 பாரமான பணிக்கு தம்மை ஆயத்தப்படுத்தல் 2. பகைவர்களிடமிருந்து விடுதலை பெறுதல்

3 சீடர்களை தைரியப்படுத்துதல் 4. கொடூரமான துன்பத்தை முற்றிலும் நீக்குதல்

Past Papers Wiki

9. "நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் என் கைகளையும் கால்களையும் பாருங்கள் நானே தான்" என்று இயேசு யாரிடம் கூறினார்

1. மத்தேயு 2. சீமான் பேதுரு 3. தோமா 4. யாக்கோபு

10. "தங்கள் வாள்களைக் கலப்பைகொளுக்களாகவும் ஈட்டிகளை கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்" என்ற வசனம் எதைக் குறிக்கிறது

1. யுத்தம் முடிவுற்று சமாதானம் நிலைநாட்டப்படுதல் 2. வாளும் ஈட்டியும் மிகவும் அவசியமானவை
3. விவசாய உபகரணங்களின் அவசியம் 4. போர்த்திறன் அதிகரித்தல்

11. யூதர்களின் யூபிலி ஆண்டில் கட்டாயமாக செய்யப்பட வேண்டிய ஒன்று

1. ஒரு திருவிழா நடத்தல் 2. அடிமைகளை விடுதலை செய்தல்
3. பறவைகளை விடுதலை செய்தல் 4. சிறப்பு பலியிடுதல்

12. "நான் உங்களை ஓநாய்களுக்கு இடையில் ஆடுகளை போல் அனுப்புகிறேன்" என்ற கூற்று எதை குறிக்கிறது

1. நற்செய்தி பணியில் சுலபமான வாழ்க்கை கிடைக்கும்
2. ஓநாய்கள் இடையே வாழ வேண்டும்
3. மக்கள் அனைவரும் நற்செய்தியை உடனே ஏற்றுக் கொள்வார்கள்
4. நற்செய்தி பணியில் துன்பங்களும் எதிர்ப்புக்களும் இருக்கும்

13. "இடிமுழக்கத்தின் மக்கள்" என்ற பெயர் வழங்கப்பட்டவர்களுள் ஒருவர்

1. யோவானும் யாக்கோபுவும் 2. பேதுருவும் யாக்கோபுவும்
3. தோமா யோவானும் 4. மத்தேயு யாக்கோபுவும்

14. "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு" என்பதை இயேசு எந்த நிகழ்வின் மூலம் வெளிப்படுத்தினார்

1. புயலை அடக்குதல் 2. யவீருவின் மகளை உயிர்ப்பித்தல்
3. முடக்குவாதமுற்றவரை குணப்படுத்தல் 4. பாவத்தில் பிடிபட்ட பெண்ணை விடுவித்தல்

15. சதுசேர்களின் கடினப்பட்ட இருதயங்களுக்கு ஆண்டவரின் பணியைத் தெளிவுபடுத்துவதற்காக இயேசுவால் கூறப்பட்ட உவமை

1. அத்திமர உவமை 2. திராட்சைத் தோட்ட குத்தகைக்காரர்
3. புதையல் உவமை 4. விதைப்பவன் உவமை

16.. சகரியா இறைவாக்கினர் எதனைக் குறித்து முன்னறிவித்தார்

1. இயேசு எருசலேமுக்குள் வெற்றிகரமாக பிரவேசித்தமை 2. இயேசுவின் பிறப்பின் சிறப்பு
3. இயேசு பாஸ்கா பண்டிகைக் கொண்டாடும் விதம் 4. இயேசுவின் பாலைவன சோதனைகள்

17. இயேசுவின் வியர்வை இரத்த துளிகளை போல் ஆனது எந்த நிகழ்வில்

1. புயலை அடக்கிய போது 2. சிலுவையில் அறையப்பட்டபோது

3. வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட போது 4. கெத்தமனே தோட்டத்தில் ஜெபித்த போது

18. மக்களின் எதிர்ப்பைப் புறக்கணிக்கும் வலிமை பிலாத்துவிடம் இல்லாததால் அவர் எடுத்த நடவடிக்கைகளுள் முதல் நடவடிக்கை

1. பரவாசை முன்நிறுத்தினான் 2. இயேசு நிரபராதி என்று அறிவித்தான்

3. எருசலேமிலுள்ள ஏரோது இராஜாவிடம் அனுப்பப்பட்டார் 4. பதவியில் இருந்து விலகினார்

19. ''நீர் கடவுளின் மெசியா'' என்பது,

1. பேதுருவின் மகத்தான அறிக்கை 2. பேதுருவின் மறுதலிப்பு

3. தேவனுடைய குரல் 4. சாத்தானின் சோதனை

20. இயேசுவின் உடல் வைக்கப்பட்டிருந்த கல்லறைக்கு பெண்கள் சென்றமை

1. இயேசுவின் கட்டளையை பின்பற்றுவதற்காக 2. உயிர்த்தெழுதலை பார்ப்பதற்காக

3. நறுமணப் பொருட்களை பூசுவதற்காக 4. உடலை வேறு இடத்துக்கு கொண்டு செல்வதற்காக

21. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நற்செய்திகளிலும் பொதுவாக இடம்பெறும் நிகழ்வு எது

1. சமாரிய பெண்ணை சந்தித்தல் 2. லாசருவை உயிர்த்தெழுப்புதல்

3. கிழக்குத் தேச ஞானிகள் வருகை 4. இயேசுவின் திருமுழுக்கு

22. இயேசுவின் சோதனைகளின் எந்த நூலில் இருந்து வசனங்களை மேற்கோள் காட்டி பதில் அளித்தார்

1. வெளிப்படுத்தல் புத்தகம் 2. லூக்கா நற்செய்தி 3. இணைச் சட்டம் 4. ஏசாயா நூல்

23. இறையரசின் பிரஜாவுரிமை பெற்றவர்கள்

1. தேவனுடைய சித்தத்தை செய்பவர்கள் 2. உயர்கல்வியை நிறைவு செய்தவர்கள்

3. செல்வத்தை சேர்ப்பவர்கள் 4. தேவ வார்த்தையை மட்டும் கேட்பவர்கள்

24. வீட்டிலே நடைபெறுகின்ற ஓர் நிகழ்வின் அனுபவத்தைக் கொண்டு இயேசு கூறிய உவமை

1. முதலாவது உண்மை உள்ள மற்றும் உண்மையற்ற ஊழியக்காரனுமே

2. வீண் செலவு செய்த கெட்டகுமாரனின் உவமை

3. நல்ல சமாரியன் உவமை

4. புளித்தமாவு உவமை

25. இயேசு யாருடைய விசுவாசத்தை பாராட்டினார்

1. சிரேனேயூர் சீமோன் 2. சீமோன் சக்கேயு 3. கப்பர்நகூம் நூற்றுக்கதிபதி 4. அரிமத்தியூரான யோசிப்பு

26. திருவிவிலியத்தில் ''வெண்மேகம்'' எதற்கான அடையாளமாக குறிப்பிடப்படுகிறது

1. இறைவல்லமையைக் குறிக்கிறது 2. இறைவனுக்கு மகிமையை வெளிப்படுத்துகின்றது

3. இறைவனை மதித்தல் பற்றியது 4. இறை பிரசன்னத்தை குறித்து நிற்கிறது

27. ''மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது''என யாருக்கு கூறப்பட்டது,

1. இயேசுவிடம் வந்த நிக்கோதேமுவிடம் 2. நிக்கதேமுவை சந்திக்க சென்ற இயேசுவின் சீடர்களிடம்

3. இயேசு சீடர்களிடம் 4. இயேசுவிடம் வந்த சீடர்களுக்கு

28. ‘‘நீங்கள் எதைச் சொன்னாலும் எதை செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியில் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்‘‘ என்ற போதனை காணப்படும் திருவிவிலியப்பகுதி

1. முதலாம் கொரிந்தியர் 2. எபேசியர் 3. கொலேசேயர் 4. பிலிப்பியர்

29. நல்லிணக்கத்துடன் வாழ்வதில் நாம் எதிர்கொள்ளும் சவால்களில் ஒன்று

1. கலப்புத்திருமணங்கள் மூலம் உருவாகும் குடும்ப அமைப்பு
2. உணவு மற்றும் ஊட்டச்சத்து
3. குடியிருப்பு மற்றும் சுற்றுச்சூழல்
4. ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல்

30. கலாத்தியர் நிருபத்தின் படி தூய ஆவியின் வழிநடத்தலின்படி வாழ்பவரின் பண்பு

1. ஊனியல்புகளின் ஆசைகளை நிறைவேற்றல்
2. ஊனியல்புகளின் இச்சைகளை நிறைவேற்றமாட்டீர்கள்
3. பாவத்தின் வல்லமைக்கு அடிமையாக இருப்பார்
4. சமூகத்தில் இகழப்படுவார்

31. ஆன்மீக வறுமையை போக்குவதற்கான வழி

1. செல்வம் சேர்த்து வைப்பதன் மூலம்
2. அதிக தான தர்மம் செய்தல்
3. வழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம்
4. விண்ணகத்தில் ஒழிந்து போகாத ஐசுவரியம் மற்றும் உரிமையைப் பெற்றுக்கொள்ளல்

32. ஒடுக்குமுறையிலிருந்து அனைவரும் சுதந்திரமாக வாழ வேண்டுமெனில் ,

1. செல்வம் குவிக்க வேண்டும்
2. கடுமையாக உழைக்க வேண்டும்
3. ஒவ்வொருவரின் மனித உரிமைகள் சுதந்திரம் அன்பு ஆகியவற்றை மதிக்க வேண்டும்
4. மனித உரிமைகளை மட்டும் விரிவுபடுத்த வேண்டும்

33. கி.மு 19ஆம் நூற்றாண்டில் ஆபிரகாம் கானானுக்கு குடிபெயர்ந்தமைக்கு முக்கிய காரணம்

1. உலக இலக்கை அடைவதற்காக 2. தேவபயம் காரணமாக
3. தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 4. தியாக வாழ்க்கையை வாழ்வதற்காக

34. மெசியா பற்றிய எண்ணக்கருத்தை விளக்க சிறந்த எடுத்துக்காட்டு,

1. ஆசாரியர் அரசர் இறைவாக்கினர் ஆகியோர் அபிஷேகம் பெறுதல்
2. நுகத்தை உடைத்தெறிந்து விடுதலை அளித்தல்
3. துன்பத்தின் வழியாக மக்களை மீட்டல்
4. தாழ்மையுடன் மக்களுக்கு சேவை செய்தல்

35. துன்புறும் ஊழியனைக் குறித்து ஏசாயா இறைவாக்கினர் எவ்வாறு விவரிக்கிறார்

1. உடைந்த நாணலைப் போன்றவர் 2. நம் துன்பங்களை தம்மீது சுமந்தவர்
3. அடிக்கப்பட்டு வேதனை அனுபவித்தவர் 4. பொறுமையின் முன்மாதிரியாக இருப்பவர்

36. பவுலின் மனமாற்ற அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம்,

1. தேவன் விரும்பியவர்களை மட்டுமே பயன்படுத்துகிறார்
2. நம் வாழ்க்கை ஆண்டவருக்குச் சொந்தமானது
3. தேவன் கொடுத்த வரங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்
4. ஞானத்தின் படி மட்டுமே தீர்மானிக்க வேண்டும்

37. எபேசுவில் பவுல் எதிர் நோக்கிய சவால்களில் ஒன்று,

1. யுரக்கிலேன் புயல் காற்று ஏற்பட்டமை
2. புற ஜாதியினர் விருத்தசேதனம் செய்ய வேண்டியதில்லை என தீர்மானிக்கப்பட்டமை
3. அர்த்தமி கோவிலின் வடிவத்தை வெள்ளியில் செய்த தெமோத்திரியு எதிராக செயற்பட்டமை
4. தியோனிசியசும் தாமரியும் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொண்டனர்

38. லீஸ்திராவிற்குப் பின்னர் பவுலை மக்கள் தெய்வமாக கருதிய நிகழ்வு

1. வெள்ளி சிலை வியாபாரிகள் கலகம் செய்த போது
2. உயிர்ப்பித்த போது
3. இக்கோனியாவில் அற்புதம் செய்தபோது
4. மால்தா தீவில் பாம்பு கடித்தும் உயிருடன் இருந்தபோது

39 செல்வந்த வியாபாரிகள் ஏழை மக்களைக் குறித்தான மனப்பான்மையை ஆமோஸ் இறைவாக்கினர் எவ்வாறு விபரிக்கிறார்,

1. ஏழைகளைப் பணத்திற்கும் வறியவரைச் செருப்பு சோடியின் விலைக்கும் வாங்கலாம்.
2. பாம்பும் பாலூட்டும் குழந்தையும் உன் முதுகில் வாழ்கின்றன.
3. என் செருப்பின் வாரை அவிழ்க்கக் கூட நான் தகுதியற்றவன்.
4. யோர்தான் பள்ளத்தாக்கின் பசுக்கள்,கொழுத்த பசுக்கள்

40. தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தத்தை வலியுறுத்திய இறைவாக்கினர்

1. மீக்கா 2. ஏசாயா 3. ஆமோஸ் 4. எரேமியா

Past Papers Wiki

பகுதி 11

1

1. திருமுழுக்கு யோவான், இயேசு ஆகியோரின் பணியினைக் குறித்து இறைவாக்கு உரைத்த இரு இறைவாக்கினர்களைப் பெயரிடுக.
2. இயேசுவின் தோற்றம் மாறுதலின் போது அவரில் காணப்பட்ட இரண்டு மாற்றங்களக் குறிப்பிடுக
3. இயேசு கிறிஸ்து எப்போதும் நம்முடன் இருக்கிறார், நம்முடன் பயணிக்கிறார் இருப்பினும் நம்மால் அவரை அடையாளம் காண முடியாமல் போவதற்கான இரண்டு காரணங்களை எழுதுக.
4. கோடிட்ட இடத்தை நிரப்புக:
    1. ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில் ----------
    2. இப்பொழுது பட்டினியாய் இருப்போரே நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில் ----------
5. 12 திருத்தூதர்கள் மற்றும் 70 சீடர்களின் பணியின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் முக்கிய இரண்டு விடயங்களை எழுதுக.
6. யூத மக்கள் செலுத்திய இரண்டு வகையான வரிகளையும், அதற்காகப் பயன்படுத்தப்பட்ட நாணயங்களையும் பெயரிடுக.
7. இறை அரசில் காணப்படக்கூடிய இரண்டு பண்புகளை எழுதுக.
8. பவுல் கைதியாக உரோமாபுரிக்குச் சென்ற பயணத்தில் அவருடன் இணைந்துகொண்ட இரு நபர்களையும் எழுதுக.
9. பவுல் மால்த்தா தீவு மக்களுக்கு சாட்சியாக இருந்த இரண்டு சம்பவங்களை எழுதுக.
10. அமைதியை ஏற்படுத்துவதற்காக இறைபணியில் பங்கெடுத்த தென்னாப்பிரிக்க குருவானவரைப் பெயரிட்டு, அமைதியை ஏற்படுத்த அத்தியாவசியமான இரண்டு காரணிகளை எழுதுக.

2.

1. அசீசியூர் புனித பிரான்சிஸின் ஜெபத்தில் உள்ள இரண்டு வேண்டுதல்களை/விண்ணப்பங்களை எழுதுக.
2. இயேசு கிறிஸ்து சிறு பிள்ளைகளின் முக்கியத்துவத்தை பேசிய ஒரு கூற்றையும், அவ்வாறு செயல்பட்ட ஒரு சந்தர்ப்பத்தையும் எழுதுக.

3 பெரியவர் யார் என்பதைக் காட்ட இயேசு கிறிஸ்து ஒரு சிறு பிள்ளையை உவமையாகப் பயன்படுத்தியதன் மூலம் வெளிப்படுத்திய ஐந்து நற்பண்புகளை எழுதி, சுருக்கமாக விளக்குக.

3.

1. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குத் தானாக முன்வந்து விருப்பம் தெரிவித்த நபரின் வார்த்தைகளையும், அதற்கு இயேசு அளித்த பதிலையும் எழுதுக.

2.“என் பின்னே வாருங்கள்” என்ற இயேசுவின் அழைப்பிற்கு அவர்கள் காட்டிய மாறுத்தரம் மற்றும் அதற்கு இயேசு அளித்த பதிலையும் எழுதுக.

3. இறை அரசின் உரிமையைப் பெற முயற்சிக்கும் நீங்கள் அதற்காக செயற்படுத்தும் 5 வழிகளை எழுதி விளக்குக

4.

1. இயேசு கிறிஸ்து தமது கோபத்தை முழுமையாக வெளிப்படுத்திய ஒரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.
2. பாவத்தை வெறுத்து, பாவியை நிராகரிக்காமல் இயேசு கிறிஸ்து செயல்பட்ட மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
3. "சோதனையில் விழாதபடி விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள்" - இயேசுவின் இவ்வார்த்தையை உமது வாழ்க்கையின் சோதனைகளின் போது எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதை தெளிவுபடுத்துக.

5.

1. நல்மேய்ப்பனைப் புறக்கணிப்பதால் ஏற்படும் இரண்டு ஆபத்துகளை எழுதுக.
2. "தீய மேய்ப்பனின் நோக்கம் அழிப்பதே ஆகும்" - என்பதை வெளிப்படுத்தும் திருவிவிலிய வசனம் ஒன்றை எழுதுக.
3. தீங்கு விளைவிக்கும் மேய்ப்பர்களின் செயல்கள் நிறைந்த சமூகச் சூழலில், நல்ல மேய்ப்பர்களாக நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஐந்து பொறுப்புகளைச் சுருக்கமாக விளக்குக.

6.

1. இரண்டாவது தூதுரைப் பயணத்தின் பணியில் இணைந்துகொண்ட இரு நபர்களைப் பெயரிடுக.
2. இரண்டாவது தூதுரைப் பயணத்தின் போது பிலிப்பி, ஏதென்ஸ், கொரிந்து ஆகிய பகுதிகளில் ஆற்றிய பணிகளை ஒவ்வொன்றாகக் குறிப்பிடுக
3. அச்செயற்பாடுகளின் மூலம் பெறப்பட்ட அனுபவங்கள் தற்போதைய சமூக சவால்களுக்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை இரண்டு வழிகளில் எழுதுக.

7.

1. அமைதியை ஏற்படுத்துவோம்
    - ஷாலோம் (Shalom) மற்றும் ஐரேனே (Eirene) ஆகிய வார்த்தைகளின் பொருள்
    - வணக்கத்திற்குரிய சந்திரா பெர்னாண்டோ மற்றும் வணக்கத்திற்குரிய திஸ்ஸ பாலசூரிய அடிகளாரின் அர்ப்பணிப்பு
    - அமைதி சீர்குலைவதற்கான காரணங்கள்
    - இறை பிள்ளைகளாக அமைதியை ஏற்படுத்த நீர் எடுக்கும் நடவடிக்கைகள்

2. சகவாழ்வோடு வாழ்வோம்
    - சகவாழ்வு என்றால் என்ன
    - சகவாழ்வோடு செயல்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்
    - சகவாழ்வோடு செயல்பட்டு தம் வாழ்க்கையை அர்ப்பணித்த நபர்கள்
    - கிறிஸ்துவின் சரீரத்துடன் இணைந்து இறை நோக்கத்தைச் செயல்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

3. இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கிறார்

- இயேசுவின் உயிர்த்தெழுதலை அனுபவப்பூர்வமாகக் கண்டவர்கள்
- அவர்கள் பெற்ற வானதூதரின் செய்தி
- இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதை உணர்ந்தவர்கள் கூறிய கூற்றுகள்
- இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கிறார் என்பதற்கு உமக்கிருக்கும் அனுபவங்களும் சான்றுகளும்

4. இயேசு கற்பித்த ஜெபத்தின் முக்கியத்துவம்

- ஜெபம் என்றால் என்ன?
- இயேசு கிறிஸ்து ஜெபத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள்
- ஆண்டவரின் ஜெபத்தில் உள்ள முக்கிய அம்சங்கள்
- ஜெபம் உமது வாழ்க்கைக்கு எவ்வாறு முக்கியமாகிறது

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 15 T
Ministry Of Education, Higher Education and Vocational Education

க.பொ.த.(சா/த) முன்னோடி மாதிரி விடைப்பத்திரம் - 2026
G.C.E. (O/L) Pre-Model Answer Paper – 2026

கிறிஸ்தவம் I, & 11

1 - 1	2 - 3	3 - 4	4 - 1	5 - 2	6 - 2	7 - 3	8 - 4	9 - 1	10 - 2
11 - 3	12 - 2	13 - 4	14 - 1	15 - 2	16 - 4	17 - 2	18 - 3	19 - 4	20 - 1
21 - 3	22 - 1	23 - 3	24 - 2	25 - 3	26 - 2	27 - 1	28 - 4	29 - 4	30 - 1
31 - 4	32 - 3	33 - 4	34 - 3	35 - 2	36 - 2	37 - 4	38 - 4	39 - 1	40 - 4

பகுதி 11

1. பெரிய இனத்தின் தந்தையாக நியமிக்கப்படல்

   நாட்டின் உரிமை பெறல்

   பிறருக்கு ஆசியாக வாழ்தல்

2. முழு வாழ்விலும் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூருவர்

   தன்னில் அன்பு கூருவதுபோல் பிறரிலும் அன்பு கூருவர்.

3. ஆமோஸ் மீக்கா

4. அ – எபேசு ஆ – அத்தமி

5. மன்னிப்பு வழங்குதல் மன்னிப்பு கேட்டல் (தரம் 11 பக்கம் 30)

6. (அ) இணைச்சட்டம் (ஆ) இறைவாரத்தையின் மூலம் (மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

7. மருத்துவரே உம்மை நீர் குணமாக்கிக் கொள்ளும்

   இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை

8. இரவு நித்திரைக்குச் செல்லு முன்

9 அனைவருக்கும் இறைசமூகத்திற்குச் செல்லும் வரம் அடையாளப்படுத்தப்படுகிறது

(10) அ - இயேசுவின் திருமுழுக்கின்போது தோற்றம் மாறுதலின் போது

ஆ – இயேசுவின் திருமுழுக்கின்போது – 'என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'

தோற்றம் மாறுதலின் போது - 'இவரே என்னுடைய மைந்தன் நான் தெரிந்துகொண்டவர் இவரே இவருக்கு செவிகொடுங்கள்'

Past Papers Wiki

2.1. இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகின்றவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்.

2. இயேசுவின் பணிக்காக பெண்களும் சீடர்களாக இணைந்து செயற்பட்டனர்

நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என மரியாளை பாராட்டினார்.

பாவியான பெண் நறுமணதைலம் பூசியதை அங்கீகரித்தார்

(மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

3. ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தல் தேவையோடிருப்பவர்களுக்கு உதவி செய்தல்

சமூகத்தில் அவர்களையும் இணைத்துக்கொள்ளல்

(மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

3.1 ஒளி பிரகாஷித்தது ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்ற சத்தம் கேட்டது நீர் யாரென பவுல் கேட்டமை நீ துன்பப்படுத்துகிற கிறிஸ்து எனக் கூறினார் அனனியா பவுலை அழைத்துச்சென்றார்

(மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

2. உரோம குடியுரிமை – தன்னை அரசர் விசாரிக்கமுடியும் எனக் கூறியமை

கல்வி கமாலியேலிடம் கற்றமை – விவாதிக்கும் திறமை ஞானமாக செயற்பட்டமை

தர்சு பட்டணம் - பல மொழிகளை கலாச்சாரங்களை அறிந்திருந்ததினால் பலருடன் நற்செய்தியைப் பகிரக்கூடியதாயிருந்தது (புத்தகத்தை அடிப்படையாககொண்டு விடைகளுக்கு புள்ளி வழங்கவும்)

3. சூழ்நிலைக்கேற்ப செயற்படுதல் ஞானமாக பதிலளித்தல் நம்பிக்கையில் உறுதியாயிருத்தல்

பிறரைத்தைரியப்படுத்தல் துன்பங்களை சகித்தல்

(மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

4.1 4 சுகமளித்தல் தீயஆவியை விரட்டல் இயற்கைக்கு மேலான வல்லமை மரணத்திலிருந்து உயிரோடெழுப்பியமை

2. சுகமளித்தல் - தொழுநோயாளரைக் குணமாக்கியமை

அசுத்த ஆவியை விரட்டுதல் - பிசாசுபிடித்த இளைஞனை அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தமை

இயற்கைக்கு மேலான வல்லமை -- காற்றையும் கடலையும் அமர்த்தியமை

மரணத்திலிருந்து உயிரோடெழுப்பியமை - லாசரு

3. (மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

5.1 போதனை உவமை அற்புதம் அரமேய மொழி பயன்படுத்தியமை

2. அ – விண்ணரசு அவர்களுக்கு உரியது ஆ - நீங்கள் நிறைவு பெறுவீர்கள்

இ - நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்

3. பிறரைக் குறித்த கரிசனைகொள்ளவேண்டும் (மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்)

6.1 கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல் வானத்திலிருந்து உண்டானது

நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது

தரம் 11 பக்கம் 43

2. இடைவிடாது ஜெபத்தில் தரித்திருந்தனர்

கடவுளைப் போற்றி மகிமைப்படுத்தினர்

வீடுகள் தோறும் அப்பம் பிட்டனர் (மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்) தரம் 11 பக்கம் 44

3. இறைபயத்தோடு பணி செய்யவேண்டும் கடவுளுடய மகிமைக்காக பணியாற்றல்

சபை மக்களைக் குறித்த கரிசனை இருக்கவேண்டும் (மாணவர்களின் பொருத்தமான விடைகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்) பாடம் 10 தரம் 11

7. 1 தரம் 10 பாடம் 27

2. தரம் 10 பாடம் 23

3. தரம் 11 பாடம் 11

4. தரம் 11 பாடம் 8

.

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library